**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 85** **நாள்: 17.07.2017**

**வாக்காளர் பட்டியலில் திருத்தம் தொடர்பான சிறப்பு முனைப்புத் திட்டம் சென்னை மாவட்டத்தில் உள்ள அனைத்து கல்லூரிகளிலும் நடைபெற உள்ளது என மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

வாக்காளர் பட்டியலில் திருத்தம் தொடர்பான சிறப்பு முனைப்புத் திட்டம் சென்னை மாவட்டத்தில் உள்ள அனைத்து கல்லூரிகளிலும் நடைபெற உள்ளது என மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, தகுதிவாய்ந்த இளம் வாக்காளர்களை (வயது 18 முதல் 21 வரை) வாக்காளர் பட்டியலில் அதிக அளவில் சேர்த்தல் மற்றும் பிழைகளை நீக்கும் பொருட்டு, இந்த ஆண்டு ஜூலை மாதம் 1ம் தேதி முதல் 31ம் தேதி வரை சிறப்பு முனைப்புத் திட்டம் (Special Drive) நடைபெற்று வருகின்றது. இது தொடர்பாக, கடந்த 09.07.2017 அன்று சென்னை மாவட்டத்தில் உள்ள அனைத்து வாக்குச்சாவடிகளிலும் சிறப்பு முகாம் நடைபெற்றது. இந்த சிறப்பு முனைப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக சென்னை மாவட்டத்தில் உள்ள இளம் வாக்காளர்களை கவரும் விதமாக சென்னை மாவட்டத்திலுள்ள அனைத்து கல்லூரிகளிலும் சிறப்பு முகாம்கள் நடைபெற உள்ளன.

எனவே, சென்னை மாவட்டத்தில் உள்ள கல்லூரிகளில் படிக்கின்ற மாணவர்கள் தாங்கள் இதுவரை வாக்காளர் பட்டியலில் தங்களுடைய பெயரை பதிவு செய்யவில்லையெனில், தங்களுடைய பெயரை இதற்காக நியமிக்கப்பட்டுள்ள தங்கள் கல்லூரி ஒருங்கிணைப்பாளரிடமோ அல்லது கல்லூரி தூதர்களிடமோ (Campus Ambassador) தெரிவித்து, கல்லூரி தூதர்கள் தெரிவிக்கும் நாளில் நடைபெறும் முகாமில் பங்குபெற்று பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது. மாணவர்களில் சிலர் வாக்காளர் அடையாள அட்டையை ஏற்கனவே பெற்றிருந்தால், அதன் விவரத்தையும் கல்லூரி தூதர்களிடம் தெரிவிக்க வேண்டும் என மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**